**சுருக்கம்**

குத்தகை – இடைப்பாடி நகராட்சி – பேருந்து நிலையத்தில் பழைய கடைகளை இடித்துவிட்டு புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகளில் எட்டு கடைகளை பொது ஏலம் தவிர்த்து பழைய கடைகளின் குத்தகைதாரர்களுக்கு வழங்க அனுமதி – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**அ.ஆ. (நிலை) எண். 201** **நாள் :20.10.2009**

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை**

**படிக்கப்பட்டது –**

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க. எண். 14380/09/ஆர்.2 நாள் 30.07.09 மற்றும் 07.09.09.

---

**ஆணை:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே படிக்கப்பட்டுள்ள தனது கடிதங்களில், இடைப்பாடி நகராட்சி பேருந்து நிலையத்திலிருந்த பழைய கடைகளை இடித்துவிட்டு ஒருங்கிணைந்த சிறு மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (IDSMT Scheme) புதிதாக கடைகள் கட்டப்பட்டுள்ளது என்றும், அக்கடைகளுக்கான கட்டுமானப் பணி ஆரம்பிக்கும்போது, கடைகள் கட்டிமுடிக்கப்பட்ட பின்பு அக்கடைகளை சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தி அங்கு இருந்த பழைய கடைகளின் குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதாகவும், அரசு விதிகளில் கண்டுள்ள நிபந்தனைகளின்படியும் ஒப்புதல் அளித்தால் பழைய குத்தகைதாரர்களுக்கு கடை ஒதுக்கீடு செய்ய பரிசீலிக்கப்படுமெனவும், இடைப்பாடி நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டது என்றும், எனினும், பழைய குத்தகைதாரர்கள் கடைகள் கட்டி முடிக்கப்பட்டபோதே நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அவர்களுக்கு கடை ஒதுக்கீடு வழங்க சாதகமாக தீர்ப்பு பெற்றதால், புதிதாக கட்டப்பட்ட கடைகளை நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுமதி பெற்று மனுதாரர்களிடம் ஒப்படைக்க நகர்மன்றம் தீர்மானித்தது என்றும், நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக நகராட்சியால் மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றும், நீதிமன்றத் தீர்ப்பு வரப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் வாதிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று நிர்ணயிக்கப்படும் வாடகை அடிப்படையில் கடைகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டதால் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக பொது ஏலம் விட நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2) மேலும் பழைய கடைகளில் எட்டு கடைகளின் உரிமைதாரர்களுக்கு, புதிதாக கட்டப்பட்ட கடைகளின் வாடகை நிர்ணயம் செய்து அவர்களுக்கு வாடகைக்கு விட நகர்மன்றம் தீர்மானித்துள்ளதால், இடைப்பாடி நகராட்சி ஆணையர், சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரக கண்காணிப்பு பொறியாளர் ஆகியோரின் பரிந்துரைப்படி, கடை எண். 31 முதல் 35 வரையிலான 5 கடைகளுக்கும், தனித்தனியாக ஒவ்வொரு கடைக்கும் மாத வாடகை ரூ.2500/– என்றும், கடை எண் 21 மற்றும் 22 ஆகிய 2 கடைகளுக்கு தனித்தனியாக மாதவாடகை ரூ.1210/– என்றும், உணவு விடுதி கடை எண். 44–க்கு மாத வாடகை ரூ.7100/– என்றும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், மேற்படி 8 கடைகளுக்கும், பழைய குத்தகைதாரர்கள் மேற்காணும் வாடகையைத் தருவதாக ஒப்புதல் கடிதம் தந்துள்ளனர் என்றும், மேலும், கடைகளுக்கான வாடகை நிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் உள்ளது என்றும், எனினும், பழைய கடைகளை அப்புறப்படுத்திவிட்டு புதிய கடைகளை கட்டும்போது பழைய குத்தகைதாரர்களுக்கு கடைகளை பொது ஏலம் தவிர்த்து வழங்கலாம் என ஆணைகள் வெளியிடப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.916 ஊ.வ(ம)உ.துறை நாள் 15.06.84 –ஐ ரத்து செய்து அரசு ஆணை (2ப) எண்.85 ந.நி.(ம)கு.வ.துறை நாள்: 19.07.2000–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும், ஆனால், இந்தக் கடைகள் 1998–ஆம் ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டு விட்டதால் மேற்குறிப்பிட்ட அரசாணையின்படி கடைகளை பொது ஏலத்தில் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது என்றும் மேற்படி கடைகளை பழைய குத்தகைதாரருக்கு வழங்க மாவட்ட உரிமையியல் நீதி மன்ற தீர்ப்பு பெறப்பட்டு சுமார் 7 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் நகராட்சியால் தற்போது மேல்முறையீடு செய்யும் வாய்ப்பு இல்லை என்றும், தற்போது மேல்முறையீடு செய்தால் தீர்ப்பு வருவதற்கு மேலும் சில ஆண்டுகள் ஆகலாம் என்றும் ஏற்கனவே பல ஆண்டுகளாக கடைகள் காலியாக இருந்து தொடர் நிதி இழப்பு ஏற்பட்டு வருகின்றது என்றும், எனவே இதனை சிறப்பினமாகக் கருதி அரசு ஆணை (2ப) எண். 85 ந.நி.(ம)கு.வ.துறை நாள் 19.07.2000–ற்கு விலக்களித்து, நகராட்சி நிர்வாக ஆணையர் நிர்ணயம் செய்த வாடகை அடிப்படையில் இடைப்பாடி பேருந்து நிலையத்தில் பழைய கடைகளை அப்புறப்படுத்திவிட்டு புதிதாக கட்டப்பட்டுள்ள எட்டு கடைகளை பழைய குத்தகைதாரர்களுக்கு பொது ஏலம் தவிர்த்து வழங்க அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3) மேலே பத்தி 2–ல் உள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. பழைய கடைகளை இடித்துவிட்டு புதிதாக கட்டப்படும் கடைகள் பொது ஏலம் மூலமே குத்தகைக்கு விடப்பட வேண்டும் என்ற அரசாணை (2ப) எண்.85, நநி(ம)குவ துறை நாள் 19.7.2000 வெளியிடுவதற்கு முன்பே மேற்குறிப்பிட்ட கடைகள் கட்டப்பட்டன என்றால், அக்கடைகள் அப்போது நடைமுறையில் இருந்த அரசாணை(நிலை) எண்.916 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 15.06.84ன்–படி பழைய குத்தகைதாரர்களுக்கே உரித்தானதாகும். எனினும் அக்கடைகளை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே 8 கடைகளின் குத்தகைதாரர்கள் பொது ஏலம் தவிர்த்து தங்களுக்கு கடை ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் சென்று, பழைய கடைகளை இடித்துவிட்டு புதிதாக கட்டப்படும் கடைகளை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட வேண்டும் என அரசாணை (2ப) எண்.85 ந.நி.(ம).கு.வ.துறை நாள். 19.07.2000–ல் வெளியிடப்பட்டுள்ள அரசாணைக்கு எதிராக நீதிமன்றத்தில் தீர்ப்பு பெற்றுள்ளனர். எனினும் அந்நீதிமன்ற தீர்ப்பு

பெறப்பட்டவுடன் அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை நகராட்சியால் எடுக்கப்படவில்லை எனினும், மேற்காணும் 8 கடைகள் நீண்ட காலமாக குத்தகைக்கு விடப்படாமலிருப்பதால், நகராட்சிக்கு ஏற்பட்டு வரும் தொடர் நிதியிழப்பை கருத்தில் கொண்டு, இடைப்பாடி நகராாட்சி பேருந்து நிலையத்தில் இருந்த பழைய கடைகளை இடித்துவிட்டு புதிதாக கட்டடப்பட்டுள்ள கடைகளை நடைமுறையிலிருக்கும் அரசாணை (2ப) எண்.85 ந.நி(ம)கு.வ.துறை நாள். 19.07.2000–க்கு புறம்பாக பொது ஏலம் தவிர்த்து பழைய கடைகளின் குத்தகைதாரர்களுக்கே வழங்கவேண்டுமென்று, வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக உடனே நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யத் தவறிய நகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், இதனை ஒரு சிறப்பினமாகக் கருதி, நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, அரசாணை (2ப) எண்.85 ந.நி(ம)கு.வ.துறை நாள் 19.07.2000–க்கு விலக்களித்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் நிர்ணயம் செய்த வாடகை அடிப்படையில் இடைப்பாடி பேருந்து நிலையத்தில் பழைய கடைகளை இடித்துவிட்டு புதிதாக கட்டப்பட்டுள்ள கடை எண்கள் 31 முதல் 35 வரை, 21, 22 மற்றும் 44 ஆகிய 8 கடைகளை பொது ஏலம் தவிர்த்து பழைய கடைகளின் குத்தகைதாரர்களுக்கு வழங்க அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சென்னை–5.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சேலம்.
நகராட்சி ஆணையர்,
இடைப்பாடி.
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர்.
ந.நி.(ம)கு.வ.துறை செயலரின் தனிச் செயலாளர்,
ந.நி.(ம)கு.வ. (அநII)துறை, சென்னை–9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.